முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1264

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.03.2023, வியாழக்கிழமை

1. பார்காக்க வந்த ஞானியே
   பரமானந்த சதாசிவ சற்குருவே
   கார்மேகம்போல் கருணை கொண்டு
   கலியுகத்தார்க்கு பசிபிணிவிரட்டும் தர்மமழைபொழிந்து
2. பொழிந்துமே உலகோரைக் காக்கும் வண்ணம்
   புண்ணியவழி நடத்தும் அரங்கராஜனே
   பெருமைபட அரங்கன் உன் தர்மம்மெச்சி
   புகழுவேன் அரங்கன் உமக்கு ஆற்றல்கூட
3. கூடவே ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 02 ம் நாள், 16.03.2023, வியாழக்கிழமை)
   குறையில்லா சுப்ரமணியர் யானும் எடுத்துரைப்பேன்
   நாடெங்கிலும் அரங்கன் உன் வேதமாம் சன்மார்க்கம்
   ஞானமாக மக்களிடை கலந்து நிற்க
4. நிற்கவே உலகோர் புனிதமாவர்
   நினைத்தவண்ணம் தர்மவழி எல்லோரும் இணைந்து
   ஆற்றல்பட கலியுகத்தில் தர்மபலம் பெருக்கி
   அகிலத்தார் எல்லாம் தர்மவான்களாவர்
5. ஆகவே இந்தவித மாற்றம் நிகழ
   அரங்கன் உபதேசம் ஞானம்வழி
   பேருலகம் ஞானபலம் கூடி
   பிரளயம் பேரிடர் அனுகாத வண்ணம்
6. வண்ணமுடன் நல்பாதுகாப்பு உண்டாகி
   வையகமே ஞானவான்கள் சூழ்ந்த
   பெருமைமிக்க ஞான பூமியாக
   பேராற்றல் கொண்ட ஞானவான்கள் ஆளும் வண்ணம்
7. வண்ணமுடன் உலகமாற்றம் கண்டு
   வையகமே ஞான ஆட்சிதனை அடையக்கூடும்
   ஆறுதலாய் அரங்கனுள் யானிருக்க அனைத்துமாற்றமும் சடுதிகண்டு இந்தவுலகம்
   வரமென அரங்கன் அவதாரத்தால் வையகமே சர்வ பாதுகாப்பைப் பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–